இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 16-11-2023

# ஆளுநர்கள் தலையில் இடி - 2

தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி, முகுல் ரோத்தகி, பி.வில்சன் ஆகியோர் வலிமையான வாதங்களை எடுத்து வைத்தார்கள்.

**“கன்னியாகுமரியில் தொடங்கி காஷ்மீர் வரை எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் அரசியல் சாசன நெறி முறைகளுக்கு எதிரான செயல்களை செய்து வருகிறார்கள். இது ஆளுநர்களுக்கு பிடித்த நோய் போல உள்ளது. தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் இதே வகையான பிரச்சினைகளுடன் உச்சநீதி மன்றத்தை அணுக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றிய மசோதாக்கள் மற்றும் அரசின் தீர்மா னங்களுக்கு உரிய நேரத்தில் ஒப்புதல் கொடுக்காமல் ஆளுநர் கிடப் பில் போடுவதால் அரசுப் பணிகள் முடங்குகிறது. டி.என்.பி.எஸ்.சி. தலைவர் நியமனம் தொடர்பான கோப்புகள் கூட ஆளுநரிடம் முடங்கிக் கிடக்கிறது. ஆணையத் தலைவர் உள்ளிட்ட 14 உறுப்பினர் பதவிகளில் 10 பணியிடங்களை நிரப்ப முடியவில்லை . டி.என்.பி.எஸ்.சி. தலைவர் உள்ளிட்ட அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முழு அதிகாரம் இல்லாமல் அரசு ஆட் சேர்ப்பு செய்ய முடியாது”** என்ற வாதங்களை அரசு சார்பில் வழக்கறிஞர்கள் வைத்தார்கள்.

**“மாநில அரசுக்கு எதிராக ஆளுநர் செயல்பட அரசியலமைப்பு அனு மதிக்கவில்லை. அரசியலமைப்பின் பிரிவு 200, மசோதாக்களை ‘கூடிய விரைவில்’ கையாள வேண்டும் என்று கோருகிறது. ஆனால், As soon as possible என்ற வாக்கியத்தை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, தவறாக புரிந்து கொண்டு தவறாக செயல்படுகிறார். அரசியல் சாசன பிரிவுகள் 200 மற்றும் 163 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி வருகிறார். ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசியல் சாசனத்திற்கு எதிராகவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக செயல்படுவதால் அவர் செயல் இழந்து விட்டார்” என தமிழ்நாடு அரசின் சார்பில் வாதங்கள் வைக்கப்பட்டது.**

மசோதாக்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைக் கையாளும் போது உச்சநீதிமன்றத்தால் ஆளுநர்களுக்கு நிர்ணயிக்கப்பட வேண் டிய காலக்கெடு குறித்து பரிசீலிக்கக்கூடிய 5 சட்ட முன்மொழிவுகளை தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வழங்கினார். அரசியலமைப்பின் 91வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவருக்கு நிர்ண யிக்கப்பட்ட கால வரம்பு 6 வாரங்கள் என்றும் அது ஆளுநர்களுக்கும் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வாதிட்டது. இந்த வாதங்களையும் கேட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், மிகக்கடுமையாக ஆளுநரை விமர்சித்துள்ளார்கள்.

**“அரசியல் சாசனம் 200வது பிரிவின் கீழ், சட்டப் பேரவையில் மசோ தாக்கள் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட உடன், உடனடி யாக அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் ஆளுநரின் செயல்பாடுகள் தாமதமாகி, மசோதாக்கள் கிடப்பில் உள்ளதாக தமிழ் நாடு அரசு தெரிவித்துள்ளது. ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் மிக முக்கியமானவை. சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட முடியாது. அரசியலமைப்புச் சட்டப்படி மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது திருப்பி அனுப்ப வேண் டும் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். இதைத்தான் செய்ய வேண்டும். ஆனால் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடு மிகவும் கவலையளிக்கிறது”** என்று நீதிபதிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநர் மற்றும் ஒன்றிய உள் துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்பவும், ஒன்றிய அரசு தரப்பில் அட்டர்னி ஜெனரல் ஆஜராகவும் உத்தரவிட்டது உச்சநீதிமன்றம்.

தமிழ்நாடு தொடர்ந்த வழக்கில் ஆளுநர் ரவி எப்படி குட்டுப்பட்டாரோ அதேபோல, பஞ்சாப் மாநில அரசு தொடர்ந்த வழக்கில் அந்த மாநில ஆளுநர் பன்வாரிலால் புரோகித் குட்டுப்பட்டுள்ளார்.

**“சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்படும் மசோதாக் களை கிடப்பில் போடும் ஆளுநர்களின் செயல் ஜனநாயகத்துக்கு ஆபத்தானது. மசோதாக்களை எத்தனை நாட்களுக்குத்தான் ஆளுநர் இப்படி கிடப்பில் போட்டிருப்பார்? ஆளுநர் தீயுடன் விளையாடுகிறார். சட்டமன்றம் கூட்டப்பட்ட முறை சரியல்ல என்று கூறி மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று ஆளுநர் எப்படி கூறமுடியும்? மக்க ளால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்றத்தின் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று எப்படி கூறமுடியும்? இது மிகவும் கவலை அளிக்கும் விவகாரம். நாம் நாடாளுமன்ற ஜனநாயகத்தைத்தான் தொடர்கிறோமா? சபாநாயகர் சட்டமன்றத்தை கூட்டியது தவறு என்று எப்படி சொல்ல முடியும்? எந்த அதிகாரத்தின் அடிப்படையில் ஆளுநர் அப்படி கூறினார்? சட்டமன்றம் கூட்டப்பட்டது சரியல்ல என்று கூறி 4 மசோதாக்களை நிலுவையில் வைத்திருக்க முடியாது; இதுபோன்ற அதிகாரங்களை ஆளுநர்கள் கையில் எடுக்க முடியாது; இது ஜனநாய கத்துக்கு ஆபத்தானது. ஆளுநர்களுக்கு சில அதிகாரங்கள் உள்ளன அதற்காக மசோதாக்களை கிடப்பில் போட முடியாது”** என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் நெத்தியடி அடித்துள்ளார்கள்.

**“மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்கே அதிக அதிகாரம் உள்ளது. மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குபவராக ஆளுநர் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசியல் சாசனம் இயற்றப்பட்டுள்ளது. ஆளுந ருக்கான அதிகாரம் என்ன என்பதை முந்தைய தீர்ப்புகள் உறுதி செய்துள் ளன”** என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

பிரெஞ்சு தேசத்தில் பதினான்காம் லூயி நினைத்ததைப் போல, ‘I AM THE STATE’ என்று நினைத்துக் கொள்ளும் ஆளுநர் ரவி உள்ளிட்ட அதிகப்பிரசங்கிகளுக்கு தலையில் இடியாய் இறங்கி இருக்கிறது உச்ச நீதிமன்றம்.

●●




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (14.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஒய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் (பொறுப்பு) திருமதி வே.அமுதவல்லி ஆகியோர் உடனிருந்தனர்.

## நீதியரசர் கே.சந்துரு தலைமையிலான

# கூர்நோக்கு இல்ல மேம்பாடு குறித்த ஒரு நபர் குழு அறிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் சமர்ப்பிப்பு!

**சென்னை, நவ. 16 -**

**கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல் பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன் களை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சமர்ப் பித்தது.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (14.11.2023) தலைமைச் செயல கத்தில், இளைஞர் நீதி அமைப் பின்கீழ் செயல்பட்டுவரும் கூர் நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல் பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன் களை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்ற ஒய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர் கள் தலைமையில் அமைக்கப் பட்ட ஒரு நபர் குழு தனது அறிக் கையை சமர்ப்பித்தது.

இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற் றும் நிர்வாகத்திறன் களை மேம்ப டுத்தும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிய ரசர் அவர்கள் தலைமையில் ஓய் வுபெற்ற இந்திய ஆட்சிப்பணி அதி காரி மற்றும் தன்னார்வ தொண்டு நிறு வனங்களின் சார்பாக ஒரு பிர திநிதியும் உள்ளடக்கிய உயர்மட் டக்குழு ஒன்று உருவாக்கப்படும் என்று 6.2.2023 அன்று முதல மைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்.

அந்த அறிவிப்பினை செயல் படுத்தும் விதமாக, கடந்த 11.04.2023 அன்று இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டு வரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாது காப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் தலைமை யில் ஒரு நபர் குழு அமைத்து அரசு ஆணையிட்டது.

அதன்படி, சென்னை உயர் நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே. சந்துரு அவர்கள் தலைமையி லான ஒரு நபர் குழுவானது கடந்த 2.5.2023 முதல் பொறுப்பேற்ற துடன் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாது காப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்த ஏதுவாக பொதுமக்களின் கருத்துக்கள் கோரப்பட்டது. அதோடு மட்டுமல் லாது மேற்படி ஒரு நபர் குழுவா னது மாநிலத்தில் செயல்பட்டு வரும் அனைத்து கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றை நேரடியாக ஆய்வு மேற்கொண்டது.

அதனைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர் கள் தலைமையிலான ஒரு நபர் குழுவானது, பொதுமக்களிடமி ருந்து பெறப்பட்ட கருத்துகள் மற் றும் நீதியரசரின் ஆய்வின் அடிப்ப டையில் முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டு, நேற்று முதலமைச் சர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, தலை மைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மக ளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணை யர் (பொறுப்பு) திருமதி வே.அமுத வல்லி, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்களின் மகள் சக்தி ஆகியோர் உடனிருந்தனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரியலூர் மாவட்டத்தில்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு உரிமைத் தொகைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

*அரியலூர், நவ, 16-*

*அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி இராஜ பாண்டியன் திருமண மண் டபத்தில் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ்” இரண்டாம் கட்டமாக பய னாளிகளுக்கு உரிமைத் தொகையினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமை யில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன் னிலையில் நடைபெற்றது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் தகுதிவாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்ற சிறப் புமிக்க இத்திட்டம் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர் களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், மேலும், தாய் தமிழ்நாட்டின் தலை மகன் பேரறிஞர் பெரும கன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 15ஆம் நாள் தொடங்கிவைத்தார்.*

*அதனை தொடர்ந்து கலை ஞர் மகளிர் உரிமைத் திட் டத்தில் விடுபட்டவர்களுக்கு விண்ணப்பங்கள் பெறப் பட்டு அவர்களில் தகுதி வாய்ந்த மகளிருக்கு சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரிமைத் தொகை களை வழங்கினார்.*

*அதன்படி அரியலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் முதல்கட்டமாக செப்டம் பர் மாதம் 15 ஆம் நாள் அன்று துவக்கி வைக்கப் பட்டு 1,51,038 எண்ணிக் கையிலான மகளிர் மாதந் தோறும் ரூ.1000 உரிமைத் தொகை பெறுகின்றனர். இதில் அரியலூர் வட் டத்தைச் சேர்ந்த 51,893 மக ளிரும், ஜெயங்கொண்டம் வட்டத்தைச் சேர்ந்த 53,726 மகளிரும், செந்துறை வட் டத்தைச் சேர்ந்த 22,484 மக ளிரும், ஆண்டிமடம் வட் டத்தைச் சேர்ந்த 22,935 மகளிரும் பயன்பெற்று வரு கின்றனர். இதன் தொடர்ச் சியாக நேற்றையதினம் வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி ராஜபாண்டி யன் திருமண மண்டபத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் இரண் டாம் கட்டமாக 6,217 மக ளிருக்கு உரிமைத்தொகைக் கான வங்கி பற்று அட்டை களை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.*

*இதில் அரியலூர் வட் டத்தைச் சேர்ந்த 1,830 மக ளிரும், ஜெயங்கொண்டம் வட்டத்தைச் சேர்ந்த 2,279 மகளிரும், செந்துறை வட் டத்தைச் சேர்ந்த 1,059 மக ளிரும், ஆண்டிமடம் வட் டத்தைச் சேர்ந்த 1,049 மகளிரும் பயன்பெற உள்ள னர்.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவ லர் மரு.ம.ச.கலைவாணி, வருவாய் கோட்டாட்சியர் கள் ராமகிருஷ்ணன் (அரிய லூர்), பரிமளம் (உடையார் பாளையம்), மாவட்ட நிலை அலுவலர்கள், உள் ளாட்சி அமைப்பின் பிரதிநி திகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண் டனர்.*



சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (14.11.2023) வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஏ.கே.அருண் கபிலன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல்மங்கை, எம்.எல்.ஏ ஆர்.ராஜேந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ.எஸ்.ஆர்.சிவலிங்கம், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி மற்றும் பேரூராட்சி தலைவர், துணை தலைவர் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் உள்ளனர்.